

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.2.2025) சென்னையில் நடைபெற்ற ஆர். சமுத்திரபாண்டியன், இ.கா.ப., (ஓய்வு) – திருமதி எஸ். ஷீலா தம்பதியரின் மகனும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருமான எஸ். அருண்ராஜ், இ.ஆ.ப, மற்றும் வி.ஆர். மேகநாதன் – திருமதி ஏ.எம். ஜெயந்தி தம்பதியரின் மகள் டாக்டர் எம். கௌசிகா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.2.2025) முகாம் அலுவலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், அரசியல் மற்றும் மத்தியக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான பிரகாஷ் காரத் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

## திருப்பூர் மேற்கு மாவட்டம் – வெள்ளக்கோவில் நகரம்

# அ.தி.மு.க. நகர்மன்ற உறுப்பினர்கள் - நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

சென்னை,பிப்.16-

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் மேற்கு மாவட்டம், வெள்ளக்கோவில் நகரம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த வெள்ளக்கோவில் நகர்மன்ற உறுப்பினரும் - நகர துணைச் செயலாளருமான வைகை கே.மணி மற்றும் நகர்மன்ற உறுப்பினரும் - தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவரும் - 11வது வார்டு செயலாளருமான சிட்டி ஜி.பிரபு ஆகியோர் தலைமையில் 20க்கும் மேற்பட்ட வெள்ளக்கோவில் வார்டு அ.தி.மு.க. நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.





முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (14-02-2025) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், திருப்பூர் மேற்கு மாவட்டம், வெள்ளக்கோவில் நகரம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த தொடர்ந்து ஐந்தாவது முறையாக வெள்ளக்கோவில் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருபவரும் - நகர துணைச் செயலாளருமான வைகை கே.மணி மற்றும் நகர்மன்ற உறுப்பினரும் - தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவரும் - 11வது வார்டு செயலாளருமான சிட்டி ஜி.பிரபு ஆகியோர் தலைமையில் வெள்ளக்கோவில் நகர அ.தி.மு.க. நிர்வாகிகளான 13வது வார்டு செயலாளர் ஆனூர் ஏ.மணி, நகர இளைஞர் இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளர் என்.சிவக்குமார், 13வது வார்டு அவைத் தலைவர் கே.தேவராஜ், 12வது வார்டு பொறுப்பாளர் ஏ.சரவணன், 13வது வார்டு பொறுப்பாளர் எம்.சுரேஷ், 13வது வார்டு துணைச் செயலாளர் வி.எஸ்.சண்முகம், 12வது வார்டு கிளைச் செயலாளர் எஸ்.சசிகுமார், 12வது வார்டு இளைஞர் பாசறை செயலாளர் கே.ராஜா, 11வது வார்டு இளைஞர் பாசறை தலைவர் ஆர்.ராகுல், 11வது வார்டு அவைத்தலைவர் ஏ.ஆறுமுகம், எம்.ஜி.ஆர். மன்ற பொறுப்பாளர் எம்.வடிவேல், 9வது வார்டு செயலாளர் மணி மற்றும் மூலனூர் ஒன்றியம், தூரம்பாடி ஒன்றிய பிரதிநிதி செல்லமுத்து, கட்டிட கூட்டுறவு சங்க முன்னாள் இயக்குநர் எஸ்.மோகன்ராஜ் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் செல்வராஜ், எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, திருப்பூர் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் - அமைச்சர். மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக திருப்பத்தூர் & காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | திருப்பத்தூர் | எஸ்.ஆர்.கே.கன்வென்ஷன் ஹால், ஈத்கா ரோடு, (வடமலை பவன் பின்புறம்) திருப்பத்தூர். |
| 19.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 14-02-2025





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். கல்லூரி முதல்வர் வில்லியம்ஸ் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட ஆட்சியர் சேக். அப்துல்ரகுமான், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய குழுத் தலைவர் உஷா.பி.கே.டி.முரளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி.முரளி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், நகர மன்றத் தலைவர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி , மாவட்ட ஊராட்சி குழு பிரேமா குப்புசாமி உள்ளிட்ட பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் பலர் உடனிருந்தனர்.

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு !

*தருமபுரி, பிப்.16-*

தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (17.02.2025 -திங்கட்கிழமை) காலை 11.00 மணி அளவில் தருமபுரி குமாரசாமிபேட்டை செங்குந்தர் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் சி.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.



மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி சிறப்புரையாற்றவுள்ளார்.

அது சமயம் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுதல் குறித்து, தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து தெரு முனை கூட்டங்கள் நடத்துவது குறித்து,கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.